**சுருக்கம்**

ஆசிரியர் பயிற்சி - மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் மற்றும் அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் - மாணவர் சேர்க்கை - 2001-2002ஆம் கல்வியாண்டிலிருந்து ஒற்றைச்சாளர முறை கொண்டு வருதல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

பள்ளிக் கல்வி (ப1)த் துறை

அரசாணை (நிலை) எண். 112 நாள் 7.8.2001.

படிக்கப்பட்டவை

1. அரசாணை (நிலை) எண்.183, பள்ளிக் கல்வி நாள் 6.7.2000
2. ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநரின் கடித எண். 10530/சி2/2000 நாள் 16.2.2001 மற்றும் 18.6.2001.
3. அரசாணை (நிலை) எண். 110, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.
4. அரசாணை (நிலை) எண். 111, பள்ளிக் கல்வி நாள் 7.8.2001.

---

**ஆணை**

தமிழ் நாட்டில், மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்களில் மாணவர்கள் சேர்க்கையானது மாவட்ட அளவிலும், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாநில அளவிலும், அங்கீகாரம் பெற்ற உதவி பெறும்/ உதவி பெறாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் அந்தந்த நிறுவனங்கள் மூலமாகவும் தற்போது நடைபெற்று வருகிறது. அவ்வாறு மாவட்ட அளவில் மாணவர் சேர்க்கை செய்யும்போதும், அந்தந்த நிறுவனங்கள் மூலம் மாணவர் சேர்க்கை செய்யும்போதும் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு இடம் கிடைக்காமல் குறைந்தமதிப்பெண்கள் பெற்ற மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் சூழ்நிலையும், இதனால் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை ஒரே சீராக அமையாத நிலையும் இருந்து வருகிறது. இவற்றையெல்லாம் அரசு கவனமாக ஆராய்ந்து மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள் (ஆதிதிராவிட மாணவர்களுக்கான தனிப்பிரிவுகள் உட்பட), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், அரசு உதவிபெறும் அங்கீகாரம் உள்ள சிறுபான்மையினரல்லாத தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள மொத்த சேர்க்கை இடங்களையும், அரசு உதவி பெறும் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சிறுபான்மையினரல்லாத மாணவர்களுக்கான 50% சேர்க்கை இடங்களையும் +2 மதிப்பெண்கள் தகுதி அடிப்படையில் இனவாரி இட ஒதுக்கீட்டுக்குட்பட்டு மாநில அளவில் 2001-2002ம் கல்வியாண்டு முதல் ஒற்றைச் சாளர முறையில் ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் மாணவர்களை தேர்வு செய்து நிரப்புவதற்கு அனுமதி வழங்கி ஆணையிடுகிறது.

2. ஒற்றைச்சாளர முறையில் சேர்க்கை செய்யும்போது கீழ்க்காணும் நெறிமுறைகள் பின்பற்றப்பட வேண்டும் எனவும் அரசு ஆணையிடுகிறது.

(i). மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள் (ஆதிதிராவிட மாணவர்களுக்கான தனிப் பிரிவுகள் உட்பட), அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் உள்ள மொத்த சேர்க்கை இடங்களில் 60% இடங்கள் +2 தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு ஒதுக்கப்படும். ஆதிதிராவிட மற்றும் பழங்குடியின மாணவர்களுக்கான தனிப்பிரிவுகளில் 60% இடங்களில் 90% ஆதிதிராவிட இனத்தவருக்கும், 10% பழங்குடியினத்தவருக்கும் ஒதுக்கப்படும்.

(ii) மேற்குறிப்பிட்ட 60% இடங்கள் போக மீதி 40% இடங்கள் அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்று பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒற்றைச் சாரள முறையில் நிரப்புவதற்கு ஒதுக்கப்படும். ஆதிதிராவிடர் தனிப் பிரிவுகளில் ஒதுக்கப்பட்ட 40% இடங்களுக்கு பாதிக்கப்பட்ட மாணவர்கள் கிடைக்காதபட்சத்தில், அவ்வினத்தைச் சார்ந்த முறையான மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படும்.

(iii). பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான 40% இடங்களுக்கு முதற்கட்டமாக இரண்டாம் ஆண்டு தேர்வு எழுதி சான்றிதழ் பெறாத பாதிக்கப்பட்ட மாணவர்களும், அத்தகைய மாணவர்கள் இல்லாதபட்சத்தில் முதலாம் ஆண்டு தேர்வு எழுதி சான்றிதழ் பெறாத பாதிக்கப்பட்ட மாணவர்களும் இனவாரி இட ஒதுக்கீடு முறைக்கு உட்பட்டு தெரிவு செய்யப்படுவர். இரண்டாம் ஆண்டில் தேர்வு எழுதி சான்றிதழ் பெறாத மாணவர்களிடையே இனவாரி இட ஒதுக்கீட்டுக்காக போதிய மாணவர்கள் இல்லாதபட்சத்தில், முதலாம் ஆண்டு தேர்வு எழுதி சான்றிதழ் பெறாத அந்தந்த இனத்து மாணவர்களிடையே தெரிவு செய்து நிரப்பலாம். இந்த இருவகை மாணவர்கள் இல்லாதபட்சத்தில் முதலாமாண்டு பயிற்சி மேற் கொண்டவர்களைக் கருதலாம்.

(iv). சிறுபான்மை மொழிப் பிரிவு சேர்க்கை இடங்களில் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஒதுக்கப்படும் 40% இடங்களுக்கு மேற்சொன்னவாறு போதிய விண்ணப்பங்கள் இல்லையெனில் முதலாம் ஆண்டு பயிற்சி முடிக்காத பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வாய்ப்பு அளிக்கலாம். ஆயினும் இவ்வகை மாணவர்கள் முதலாண்டு பயிற்சி பெற்ற விவரங்களை இவர்களுக்கென மேல்நிலைப் பள்ளிகளில் குறுகிய கால பயிற்சி அளித்த விவரங்களுடன் ஒப்பிட்டு சரிபார்க்கப்பட வேண்டும். அப்படியும் போதிய விண்ணப்பங்கள் பெறப்படாதபட்சத்தில், அவ்விடங்கள் பொதுப்பிரிவிலிருந்து அந்தந்த சிறுபான்மை மொழிப் பிரிவைச் சார்ந்த முறையான மாணவர்களைக் கொண்டு நிரப்பப்படும். அங்கீகாரம் ரத்து செய்யப்பட்ட சிறுபான்மையின மொழி தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயின்றவர்கள் மட்டுமே தகுதியுடையவராவர்.

(v) முறையான மாணவர்களுக்கு தனியான விண்ணப்பமும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு தனியான விண்ணப்பமும் கடை பிடிக்கப்படும்.

(vi) தேர்வு எழுதிய பாதிக்கப்பட்ட மாணவர்களின் உண்மைத் தன்மை அறிய அரசுத் தேர்வுகள் இயக்குநர் பராமரிக்கும் TMR உடன் சரிபார்க்கப்படும். முதலாமாண்டு பயிற்சி மேற்கொண்டவர்கள் விபரம் குறித்து அதனை மேல்நிலைப் பள்ளிகளில் குறுகியகாலப் பயிற்சி அளித்த விபரங்களுடன் சரி பார்க்கப்படும்.

(vii). பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான இட ஒதுக்கீடு, ஆண் பெண்பாலின முறை, பாடப்பிரிவு முறை ஆகியவற்றை கடைபிடிக்க வேண்டிய அவசியமில்லை

(viii). ஒற்றைச் சாளர முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்களின் நிறுவன ஒதுக்கீடானது Counseling முறையில் செய்யப்படும்.

3. ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்க்கைகான கல்வித் தகுதி வயது வரம்பு போன்றவை கீழ்க்கண்டவாறு நிர்ணயிக்கப்படுகிறது :-

(அ) கல்வித் தகுதி:

எல்லாவகை நிறுவனங்களுக்கும் சேர்க்கப்படுவோர் பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்று மொத்த மதிப்பெண்களில் (First Improvement Marks உட்பட) 50 விழுக்காடு மதிப்பெண்கள் பெற்றிருக்கவேண்டும். எனினும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு பிளஸ் 2 தேர்வில் தேர்ச்சி பெற்றிருந்தாலே போதுமானது. விண்ணப்பதாரர் எந்த மொழிப்பிரிவிற்கு விண்ணப்பிக்கின்றாரோ அம்மொழியினை பிளஸ் 2 வரை மொழிப் பகுதி ஒன்றாகவோ அல்லது இரண்டாகவோ பயின்றிருக்க வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு நிறுவன மொத்த இடங்களில்

(1) பிளஸ் 2 அறிவியல் பாட மாணவர்களுக்கு 50%
(2) பிளஸ் 2 கலைப்பாட மாணவர்களுக்கு 25%
(3) பிளஸ் 2 தொழிற்கல்விப் பாட மாணவர்களுக்கு 25%

என ஒதுக்கப்படும்.

(இ) வயது வரம்பு:

31.7.2001 அன்று குறைந்தபட்ச வயது 17 நிரம்பியும், அதிகபட்ச வயது 25-க்கு மிகாமலும் இருக்கவேண்டும். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு அதிக பட்ச வயது 30 ஆகும். விதவைகளுக்கான அதிகபட்ச வயது 35. பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கான வயது வரம்பு குறித்து தனியாக தெரிவிக்கப்படும்.

## தேர்ந்தெடுக்கும் முறை

(i) இட ஒதுக்கீடு முறைக்குட்பட்டு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

**இட ஒதுக்கீடு:**

| | | |
|---|---|---|
| 1. | ஆதி திராவிடர் | 18 சதவீதம் |
| 2. | பழங்குடியினர் | 1 சதவீதம் |
| 3. | மிகவும் பிற்படுத்தப்பட்டோர் | 20 சதவீதம் |
| 4. | பிற்படுத்தப்பட்டோர் | 30 சதவீதம் |
| 5. | பகிரங்கப் போட்டி | 31 சதவீதம் |

இன ஒதுக்கீடு முறைக்கு சாதிச் சான்றிதழ் மிக அவசியமாகிறது. பழங்குடியினத்தவரைப் பொருத்தமட்டில் கோட்டாட்சித் தலைவரால் வழங்கப்பட்ட சான்றிதழ் இணைக்கப்பட வேண்டும்.

### (II) சிறப்பு ஒதுக்கீடு

மாவட்ட ஆசிரியர் கல்வி பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள், சிறுபான்மையல்லாத அரசு உதவி பெறும் தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் ஆகியவற்றில் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு நிறுவனத்திற்கான மொத்த இடங்களில்

(அ) பள்ளிக் கல்வித் துறையில் (பள்ளிக் கல்வி இயக்ககம், தொடக்கக் கல்வி இயக்ககம், மாவட்டத் தொடக்கக் கல்வித் திட்ட இயக்ககம், முறைசாரா கல்வி இயக்ககம், ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், ஆசிரியர் தேர்வு வாரியம் ஆகிய இயக்ககங்களின் நிர்வாகக் கட்டுப்பாட்டில் உள்ளவை) பணிபுரிந்து பணியில் இறந்து போன ஆசிரியர்/ஆசிரியரல்லாதோர் வாரிசுகளுக்கு (அதுவும் அந்த குடும்பத்துக்கு ஆதரவாக உள்ள வாரிசுகள் மட்டுமே) .. 2 இடங்கள்

இறப்புச் சான்றிதழ், வாரிசு சான்றிதழ் மற்றும் கல்வித் துறையில் பணிபுரிந்து பணியில் இருக்கும்போது இறந்ததற்கான கல்வித் துறை உயர் அலுவலர்களிடமிருந்து (மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர், மாவட்டக் கல்வி அலுவலர்) பெற்ற சான்றிதழ் ஆகியவைகளின் பேரில்.
(திருமணமான மகளிர் வாரிசுகள் மற்றும் கணவர் இறந்து மனைவி அரசுப் பணியில் பணிபுரிந்தாலோ அல்லது மனைவி இறந்து கணவன் அரசுப் பணியில் பணிபுரிந்தாலோ அவர்களது வாரிசுகள் தகுதியற்றவர்களாவர்.)

| | | |
|---|---|---|
| (ஆ) விதவைகள்(மறுமணம் ஆகாதவர்) (வட்டாட்சியர் சான்றிதழின் பேரில்) | .. | 2 இடங்கள் |
| (இ) கலப்புத் திருமணத் தம்பதியர்களின் குழந்தைகளுக்கு (வட்டாட்சியரின் சான்றிதழின் பேரில்) (ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினத்தவருடன் மற்ற இனம் சார்ந்த கலப்புத் திருமணத் தம்பதிகள்) | .. | 1 இடம் |
| (ஈ) முன்னாள் படைவீரர்களின் குழந்தைகளுக்கு (முன்னாள் படைவீரர்களின் மாவட்ட அலுவலர் சான்றிதழின் பேரில்) | .. | 1 இடம் |
| (உ) உடல் ஊனமுற்றோருக்கு ( மாவட்ட மருத்துவக்குழு அளித்த சான்றிதழின் பேரில்) | .. | 1 இடம் |
| ஊ) தமிழ்மொழிப் போராட்ட தியாகிகளுக்கான உதவித் தொகை பெறும் தியாகிகளின் மகன்/மகள்/பேரன்/பேத்திகள்(உதவித் தொகை பெறுவதற்கான சான்றிதழ்களை தமிழ் வளர்ச்சி இயக்குநரிடமும், வாரிசு சான்றிதழினை சம்பந்தப்பட்ட வட்டாட்சியரிடமும் பெற்றிருக்க வேண்டும்) | .. | 1 இடம் |
| (எ) இந்திய விடுதலைப் போராட்ட தியாகிகளின் மகன்/மகள்/பேரன்/பேத்தி (மைய அரசு/தமிழக அரசால் வழங்கப்பட்ட சான்றிதழ் மற்றும் உறவு முறை வாரிசு சான்றிதழின் பேரில்) | .. | 1 இடம் |

(இந்த சிறப்பு ஒதுக்கீடு 60% இடத்தில் ஒதுக்கப்படும்)

4. ஆசிரியர் பயிற்சியில் சேருவதற்கான விண்ணப்பங்களை இயக்குநரே அச்சடித்து மாவட்ட ஆசிரியர் கல்விப் பயிற்சி நிறுவனங்கள், அரசு ஆசிரியர் பயிற்சி நிறுவனங்கள் மூலமாக விநியோகிக்கலாம். தமிழ் நாட்டில் இருப்பிடம் கொண்டோர் மட்டுமே விண்ணப்பிக்க தகுதி பெறுவர். அதற்கான இருப்பிடச் சான்றிதழ் பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் சான்றொப்பமிட்ட (ATTESTED) சான்றிதழ்களுடன் நேரிடையாக "இயக்குநர், ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்ககம், சென்னை 600 006," என்ற முகவரிக்கு அனுப்பபட வேண்டும். விண்ணப்பத்துடன் இணைத்து பெறப்படும் சான்றிதழ்கள் மட்டுமே கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும். பின்னர் பெறப்படும் சான்றிதழ்கள் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. அவ்வப்பொழுது பெறப்படும்

விண்ணப்பங்களை அன்றைய தினமே பதிவு செய்து இயக்குநரால் ஒப்புகை வழங்கப்பட வேண்டும்.

5. ஆசிரியர் பயிற்சியில் சேருவதற்கான கல்வித் தகுதி, வயது வரம்பு, பாடவாரி முறை ஆகியவை சிறுபான்மை நிறுவனங்களுக்கும் பொருந்தும். இது குறித்து ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்க வேண்டும். உதவி பெறும் தனியார் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சிறுபான்மையினருக்கான 50 விழுக்காடு இடங்களுக்கான விண்ணப்பங்களை அந்தந்த நிறுவனமே விநியோகிக்கும்.

6. அரசு உதவி பெறாத அங்கீகாரம் பெற்ற தனியார் சிறுபான்மை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை குறித்து தனியாக ஆணை வெளியிடப்படும்.

7. பாதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களிடமிருந்தும் விண்ணப்பங்கள் பெறலாம்.

8. ஆசிரியர் பயிற்சிக்கான மாணவர் சேர்க்கை குறித்து நாளேடுகளில் உரிய முறையில் விளம்பரம் செய்வதற்கும் இதற்கான செலவினத்தை உரிய தலைப்பில் செலவு செய்து கொள்வதற்கும் ஆசிரியர் கல்வி, ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநருக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

வி.கு. கப்புராஜ்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்

ஆசிரியர் கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சி இயக்குநர், சென்னை-6.
அரசு தேர்வுகள் இயக்குநர், சென்னை-6.
பணிமேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை-79.
(அரசாணையை அரசிதழில் வெளியிடும் பொருட்டு)
நகல்: சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை-35.
முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
கல்வி அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//